**செய்தி வெளியீடு எண் : 1560** **நாள் : 10.09.2022**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், திரைப்பட இயக்குநர் திரு. பாரதிராஜா அவர்கள் உடல்நலக்குறைவு காரணமாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று இல்லம் திரும்பியதையொட்டி இன்று (10.9.2022) நீலாங்கரையில் உள்ள அவரது இல்லத்திற்கு நேரில் சென்று சந்தித்து, உடல்நலம் விசாரித்தார்.

முன்னதாக, திரைப்பட இயக்குநர் திரு. பாரதிராஜா அவர்கள் உடல்நலக்குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் செய்தியறிந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், திரு. பாரதிராஜா அவர்களின் மனைவியை தொலைபேசி வாயிலாக தொடர்புக் கொண்டு உடல்நலம் குறித்து விசாரித்தறிந்தார். தற்போது திரு. பாரதிராஜா அவர்கள் நலம் பெற்று இல்லம் திரும்பியதையடுத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரில் சந்தித்து, நலம் விசாரித்தார்.

இச்சந்திப்பின்போது, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு, கவிப்பேரரசு வைரமுத்து மற்றும் திரு. பாரதிராஜா அவர்களின் மகன் திரு. மனோஜ் ஆகியோர் உள்ளனர்.

•••••••

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in